## <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:-திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

***நி.வி.எண்.65/2021 in நி.வி.எண்.47-2016 in நி.ம.எண்.164/2015 in***

***அ.வ.எண்.282/1989***

வேணுகோபால் .....மனுதாரர்-எதிர்மனுதாரர்-மனுதாரர்-
தீர்ப்பாணை பெற்றவர்

/எதிர்/

நற்குணன் ..... எதிர்மனுதாரர்-மனுதாரர்-எதிர்மனுதாரர்-
தீர்ப்பு கடனாளி

இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 05.08.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.கே.ராமதாஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 13 விதி 9 மற்றும் பிரிவு 151ன்கீழ் நி.வி.47-2016 மனுவின் விசாரணைக்கு விசாரணை நீதிமன்றத்தில் உள்ள மேற்படி 27.9.1994ல் ரூ.7,500-ஐ டெபாசிட் செய்ததற்கான (செலான் எண்.161, வங்கி செலான் எண்.59) லெட்ஜர் அல்லது லெட்ஜர் காபியை இந்த நிறைவேற்று நீதிமன்றத்திற்கு send for செய்து மேல் உத்தரவு செய்யுமாறு இந்த மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

**<u>2. மனுவின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் நிறைவேற்று மனுவில் தீர்ப்பாணை பெற்றவர் என்றும் நி.வி.47-2016லும் எதிர்மனுதாரர் என்றும் இந்த எதிர்மனுதாரர் அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர் என்றும் இந்த எதிர்மனுதாரர் 31.8.1988 தேதியிட்ட கிரய உடன்படிக்கை உண்மையானதல்ல என்றும் நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்ய கோரியும் இந்த நி.வி.47-2016 மனுதாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த மனுவில் தான்

எதிருரை தாக்கல் செய்துள்ளதாகவும், நி.வி.47-2016 மனுவில் மனுதாரர் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு எதிர்மனுதாரரான தனது தரப்பு சாட்சி விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் தான் அசல் வழக்கில் கிரய பாக்கி தொகை ரூ.7500-ஐ விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணைப்படி மேற்படி நீதிமன்றத்தில் 27.9.1994 அன்று வைப்பீடு செய்துள்ளதை இந்த எதிர்மனுதாரர் மறுத்து கட்சி செய்து வருகிறார் என்றும் எனவே மேற்படி வைப்பீடு செய்யப்பட்டிருப்பதை நிரூபிக்கும் பொருப்பும் கடமையும் தனக்கு இருந்து வருகிறது என்றும், அதற்காக மேற்படி விசாரணை நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் வசம் உள்ள 27.9.1994ல் தான் டெபாசிட் செய்ததை காட்டக்கூடிய லெட்ஜர் அல்லது அதன் காப்பியை நிறைவேற்று நீதிமன்றத்தில் send for செய்து உத்தரவு செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிருபணம் செய்ய வேண்டும் என்றும், இம்மனு மிகவும் காலம் கடந்தது என்றும், மனுதாரர் டெபாசிட் செலுத்திய தொகை நீதிமன்றத்தில் இல்லாத காரணத்தினால்தான் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றத்தின் லெட்ஜர் அக்கவுண்ட்டை send for செய்ய சட்டத்தில் இடமில்லை என்றும் இந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவையில்லாமல் அனைவரும் இதுபோன்று மனுவினை தாக்கல் செய்யலாம் என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேணுமாய் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனு அனுமதிக்கத்தகக்தா என்பது தான் ஆய்வுக்குரிய பிரச்சனை?

6. இரு தரப்பையும் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் அசல் வழக்கில் கிரய பாக்கி தொகை ரூ.7500-ஐ விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணைப்படி மேற்படி நீதிமன்றத்தில் 27.9.1994 அன்று வைப்பீடு செய்துள்ளதை இந்த எதிர்மனுதாரர் மறுத்து கட்சி செய்து வருகிறார் என்றும் எனவே மேற்படி வைப்பீடு செய்யப்பட்டிருப்பதை நிரூபிக்கும் பொருட்டு விசாரணை நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் வசம் உள்ள 27.9.1994ல் தான் டெபாசிட் செய்ததை

காட்டக்கூடிய லெட்ஜர் அல்லது அதன் காப்பியை நிறைவேற்று நீதிமன்றத்தில் send for செய்து உத்தரவு செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் *மனுதாரர் டெபாசிட் செலுத்திய தொகை நீதிமன்றத்தில் இல்லாத காரணத்தினால்தான் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றத்தின் லெட்ஜர் அக்கவுண்ட்டை send for செய்ய சட்டத்தில் இடமில்லை என்றும் இந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவையில்லாமல் அனைவரும் இதுபோன்று மனுவினை தாக்கல் செய்யலாம்* என குறிப்பிட்டிருந்தாலும் மனுதாரர் அசல் வழக்கில் கிரய பாக்கி தொகை ரூ.7500-ஐ விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணைப்படி இந்நீதிமன்றத்தில் 27.9.1994 அன்று வைப்பீடு செய்துள்ளதை இந்த எதிர்மனுதாரர் மறுத்து கட்சி செய்துள்ளார் எனும்பட்சத்தில் மனுதாரர் தரப்பினை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டி இந்நீதிமன்ற அலுவலக தலைமை எழுத்தர் வசம் உள்ள 27.9.1994ல் தான் டெபாசிட் செய்ததை காட்டக்கூடிய லெட்ஜர் அல்லது அதன் காப்பியை நிறைவேற்று நீதிமன்றத்தில் send for செய்ய உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு வரவழிக்க உத்தரவிடுவதனால் இம்மனுவின் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் தன்மையும் மாறப்போவதில்லை. மேலும் இம்மனுவினை அனுமதிப்பதால் அசல் வழக்கில் ஒரு முடிவுக்கு வர நீதிமன்றத்திற்கு ஏதுவாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து, அசல் வழக்கு 282-1989ன் தீர்ப்பாணையின்படி இம்மனுவின் மனுதாரர் 27.9.1994ல் ரூ.7,500-ஐ டெபாசிட் செய்ததற்கான (செலான் எண்.161, வங்கி செலான் எண்.59) லெட்ஜர் அல்லது லெட்ஜர் காபியை இந்த நிறைவேற்று நீதிமன்றத்திற்கு வரவழைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 2021 ஆகஸ்டு மாதம் 10ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.